## விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

**பிறப்பிப்பவர்: திரு. ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப.,**

ந.க.எண். 3173/2017/பேரூ2 நாள். 25.12. 2020

பொருள்: பணிக்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – கடலூர் மண்டலம் – விழுப்புரம் மாவட்டம் – அரகண்டநல்லூர் பேரூராட்சி பதிவறை எழுத்தர் – செல்வராஜ் (திரு) டி. – என்பவர் பணியிடையில் 12.09.1997–ல் காலஞ்சென்றது – தனியரின் வாரிசுதாரர் பாலமுருகன் (திரு) செ. – என்பவருக்கு கருணை அடிப்படையில் வரித்தண்டலராக பணி நியமனம் வழங்கப்பட்டது – நியமன அலுவலர் நிலையில் தனியர் வரித்தண்டலராக பணியில் இணைந்த நாளான 05.10.1998 முற்பகல் முதல் தனியரின் வரித்தண்டலர் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:

1) விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். டிபி2/4567/1997, நாள். 08.09.1998.
2) அரசாணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு)த் துறை, நாள். 02.03.2016.
3) தியாகதுருகம் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண்.அ1/162/2017, நாள். 26.10.2017.
4) விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.3173 / 2017/பேரூ.2, நாள்.21.07.2018.
5) பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண். 10850/2018/அ6, நாள். 31.10.2020.
6) தொடர்புடைய ஆவணங்கள்.

*****

**ஆணை:**

விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் பேரூராட்சியில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து 12.09.1997 அன்று பணியிடையில் காலஞ்சென்ற திரு.டி. செல்வராஜ் என்பவரது வாரிசுதாரர் திரு.செ. பாலமுருகன் என்பவருக்கு பார்வை 1–ல் காணும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி பேரூராட்சியில் காலியாக இருந்த வரித்தண்டலர் பணியிடத்தில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

பார்வை 4–ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தின் வழி மேற்காணும் பணியாளரின் பணியினை வரன்முறை செய்ய கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டதில், பார்வை 5–ல் காணும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு1)த் துறை, நாள்.02.03.2016–ல் கூறியுள்ளவாறு ஆணைகள் மற்றும் வழிமுறைகள் பின்பற்றி பத்தி (6.1) மற்றும் பத்தி (6.2) தெரிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்றி பணி நியமன அலுவலர் நிலையில் தனியரின் பணியினை வரன்முறை செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், தனியர் வரித்தண்டலராக பணியில் இணைந்த நாளான 05.10.1998 முற்பகல் முதல் தனியரின் வரித்தண்டலர் பணியினை வரன்முறை செய்து இதன் வழி ஆணையிடப்படுகிறது.

. . . 2

**<u>பணி வரன்முறை விபரம்</u>**

| வ. எண் | பணியாளர் பெயர் / பணிபுரியும் பேரூராட்சி | வரித்தண்டலராக பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.செ.பாலமுருகன், இளநிலை உதவியாளர், திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம். | 05.10.1998 முற்பகல் | 05.10.1998 முற்பகல் |

மேற்காணும் விவரப்படி தனியரின் வரித்தண்டலர் பணியினை வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், தனியரது வரித்தண்டலர் பணி வரன்முறை செய்யப்பட்டது குறித்து உரிய முன்மொழிவினை பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக அரசுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
விழுப்புரம் மாவட்டம்.

பெறுநர் :

திரு. செ. பாலமுருகன்,
இளநிலை உதவியாளர்,
திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம் (செயல் அலுவலர் வழியாக).

நகல்: பேரூராட்சிகளின் இயக்குநர், 7 மற்றும் 8வது தளம், நகர் நிர்வாக அலுவலக வளாகம், 75.சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.
நகல்: பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம்–உரிய தொடர் நடவடிக்கையின் பொருட்டு
நகல்: செயல் அலுவலர், திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம்.
நகல்: பேரு.2 இருக்கைக்கு.